மாலைக்கதிர்
Maalaikkathir
சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 09 வியாழக்கிழமை 25.07.2024 கதிர் 311




# ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறும் திகதி நாளை அறிவிக்கப்படும்! தேர்தல்கள் ஆணைக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது

## விசேட வர்த்தமானி மூலம் விபரங்கள் வெளியாகுமாம்!

**ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறும் திகதியை நாளை அறிவிப்பதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.**

**ஜனாதிபதித் தேர்தலுக்கான விதிமுறைகள் வெளியிடப்படும் திகதி, வேட்புமனுக்கள் ஏற்கப்படும் திகதி மற்றும் இடம், வாக்களிக்கும் திகதி குறித்த விசேட வர்த்தமானியை நாளை வெளியிடவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**அத்துடன், ஜனாதிபதித் தேர்தல் திகதி மற்றும் ஏனைய அரசியலமைப்புச் செயற்பாடுகள் தொடர்பில் பல்வேறு நபர்கள் மற்றும் கட்சிகள் வெளியிடும் அறிக்கைகள் தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு எவ்வித பொறுப்பும் இல்லை என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்னாயக்க வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**(04)**



## "சிங்களப் புலி" என விமர்சிக்கப்பட்ட கலாநிதி விக்கிரமபாகு காலமானார்




இலங்கையின் சிரேஷ்ட இடதுசாரி தலைவர்களுள் ஒருவரான நவ சம சமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன சுகவீனம் காரணமாக தனது 81 ஆவது வயதில் நேற்று இரவு காலமானார்.

நீண்ட காலமாக சுகவீனமுற்றிருந்த அவர், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் காலமானார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

1943ஆம் ஆண்டு மார்ச் 8ஆம் திகதி லுணுகலையில் பிறந்த கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன, மத்துகமவில் தனது ஆரம்பக் கல்வியையும், பின்னர் உயர்கல்வியை கொழும்பு ஆனந்தா கல்லூரியிலும் பயின்றார்.

அதன்பின்னர் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்ததுடன், இங்கிலாந்தின் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் 1970ஆம் ஆண்டு கலாநிதிப் பட்டம் பெற்றார்.

இதனையடுத்து நாடு திரும்பிய அவர், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றினார்.

1962ஆம்ஆண்டுவிக்கிரமபாகு கருணாரத்ன, லங்கா சம சமாஜக் கட்சியில் இணைந்து தனது அரசியல் பயணத்தை ஆரம்பித்தார்.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை உள்ளிட்ட பல்வேறு விடயங்களை அவர் தனது காலத்தில் வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எங்கு அநீதி இழைக்கப்பட்டாலும், ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்டாலும் அங்கு நீதியின் குரலாக நின்று களமாடிய ஒரு சிறந்த இடதுசாரி அரசியல் தலைவர்தான் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன.

பதவிகளுக்காகவும், சலுகைகளுக்காகவும் கொள்கை துறந்து - கோட்பாடு மறந்து குரங்குகள்போல் அங்கும் இங்கும் தாவும் கோமாளி அரசியலை நிராகரிக்கும் –

2

## யாழ்ப்பாணத்தில் சர்வதேச புத்தகத் திருவிழா மூன்று தினங்கள் நடத்துவதற்கு ஏற்பாடுகள்!




யாழ்ப்பாண வர்த்தக தொழில்துறை மன்றத்தின் ஏற்பாட்டில், காலைக் கதிர் ஊடகக் குழுமத்தின் ஊடகப் பங்களிப்போடு, யாழ்ப்பாண கலாசார மண்டபத்தில் எதிர்வரும் ஓகஸ்ட் 9ஆம் திகதி முதல் 11 ஆம் திகதி வரையில் மூன்று நாட்கள் சர்வதேச புத்தகத் திருவிழா நடைபெறவுள்ளதா நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இலங்கையிலிருந்து மட்டுமல்லாமல் பல்வேறு நாடுகளில் இருந்தும் பல்வேறுபட்ட புத்தக விற்பனை நிறுவனங்கள் மற்றும் வெளியீட்டகங்களின் புத்தகங்கள் இங்கு காட்சிப்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்படவுள்ளன.

"நாம் நமது உடலுக்கு உடற்பயிற்சி செய்வது போல, வாசிப்பு என்பது நம் மனதுக்கும் புத்திக்கும் ஒரு புத்துணர்ச்சி அளிக்கக்கூடியது. அதிவேகமாக வளர்ந்து வரும்

2

## ஜனாதிபதித் தேர்தலில் பொன்சேகாவும் களத்தில்

### உத்தியோகபூர்வமாக அறிவிப்பு



வரும் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராகக் களமிறங்குவதாக பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தமது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

2

## ஊடகவியலாளர்களுக்கு தபால் மூலம் வாக்களிக்க வாய்ப்பு வழங்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை

### ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் கோரினார்

ஊடகவியலாளர்களுக்கு தபால் மூலம் வாக்களிக்க வாய்ப்பு வழங்குமாறு ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் நேற்று (24) நாடாளுமன்றத்தில் கேட்டுக் கொண்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "எதிர்காலத்தில் ஜனாதிபதித் தேர்தல் உட்பட பல தேர்தல்கள் நடைபெறவுள்ளன. எமது நாட்டிலுள்ள ஊடக நிறுவனங்களில் பணியாற்றும் ஊடகவியலாளர்களுக்கு ஒருபோதும் வாக்களிக்க முடிவதில்லை. நமது நாட்டில் 17 தொலைக்காட்சி அலைவரிசைகள் மற்றும் 52 வானொலி நிலையங்கள் உள்ளன. தேர்தல் காலங்களில் இவற்றில் பணியாற்றுபவர்கள் தேர்தல் பணிகளிலேயே இருப்பதுண்டு. இதனால் அவர்களுக்கு ஒருபோதும் வாக்களிக்கும்

2



## யாழ்ப்பாணத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொழிநுட்ப இந்த உலகில் நமது சமூகத்தில் வாசிப்பு கலாசாரத்தை மீட்டெடுக்க வேண்டிய தேவை நமக்கு உள்ளது.

அந்த வகையில் மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பொதுமக்களிடம் வாசிப்பை மேம்படுத்தும் பொருட்டு அவர்களுக்கு தேவையான புத்தகங்களை அவர்களிடம் கொண்டு சேர்க்க வேண்டிய கடமைப்பாடு எமக்கு உண்டு.

உள்நாட்டிலும், தேசிய அளவிலும், சர்வதேச அளவிலும் ஆர்வமும் பங்குகொள்ள விருப்பமும் உள்ள புத்தக வெளியீட்டாளர்கள் மற்றும் விற்பனையாளர்களை ஒன்றிணைத்து இந்தப் புத்தகத் திருவிழாவை நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

ஒவ்வொரு வருடமும் பல புத்தகக் கண்காட்சிகள் நடக்கின்றன. ஆனால், யாழ்ப்பாணத்தில், உள்ளூர் மற்றும் சர்வதேச எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் வகையில் யாழ்ப்பாண வர்த்தகத் தொழிற்துறை மன்றமானது இந்த புத்தக கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளது.

இக்கண்காட்சியின் மூலம் வடமாகாணத்தைச் சேர்ந்த நூலகங்கள், சனசமூக நிலையங்களுக்கும் இந்த புத்தகத் திருவிழா நல்லதொரு வாய்ப்பாக அமையும் என நாம் கருதுகிறோம். பாடசாலைகள் கூட தமது நூலகங்களுக்குத் தேவையான புத்தகங்களை இந்த புத்தகத் திருவிழாவில் பெற்றுக்கொள்ள முடியும்.

புத்தக திருவிழா இடம்பெறும் தினங்களில் புத்தக வெளியீடுகள், அறிமுக நிகழ்வுகள் மற்றும் கலை, கலாசார நிகழ்வுகள் என்பவற்றுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வடமாகாணத்தை சேர்ந்த அனைத்து மக்களும் இந்த நிகழ்வில் பங்குபற்ற கூடியவாறு ஏற்பாடுகள் அமையப்பெற்றுள்ளன.

இக்கண்காட்சியை இலவசமாகப் பார்வையிட முடியும். 40 காட்சிக் கூடங்கள் அமைக்கப்படும். அவற்றில் உள்ளூர், வெளியூர் எழுத்தாளர்களின் புத்தகங்களை காட்சிப்படுத்தவுள்ளோம்," என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த ஊடகச் சந்திப்பில் யாழ்ப்பாண வர்த்தக தொழில்துறை மன்றத்தின் நிறைவேற்று இயக்குனர் கு.விக்னேஷ், வர்த்தக தொழில்துறை மன்றத் தலைவர் கலாநிதி வாசுதேவன் ராசையா மற்றும் உப தலைவர் கலாநிதி செல்லத்துரை திருமாறன் ஆகியோர் கலந்து கொண்டனர். (01)

## சிங்களப்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வெறுக்கும் கொள்கையுடன் செயற்படும் அரசியல்வாதிகளுள் விக்கிரபாகுவும் ஒருவர்.

தமிழ்த் தேசியத்துக்காகவும், தமிழர்களின் உரிமைகளுக்காகவும் இணைந்த வடக்கு, கிழக்கில் சமஷ்டி தீர்வுக்காகவும் தென்னிலங்கையில் இருந்து ஓங்கி ஒலித்த குரலே பாகு தோழர்.

இதனால் அவர் சந்தித்த நெருக்கடிகள், அச்சுறுத்தல்கள் ஏராளம். சிங்களப் புலி, துரோகி என்றெல்லாம் கடும்போக்குடைய இனவாதிகள் அவர் மீது சொற்களைகளைத் தொடுத்தனர்.

2012 இல் தி.மு.க. தலைவர் கருணாநிதி தலைமையில் சென்னையில் நடைபெற்ற டெசோ மாநாட்டுக்கு விக்கிரமபாகு கருணாரத்னவும் அழைக்கப்பட்டிருந்தார். இதனால் தென்னிலங்கையில் அவருக்கு எதிராக சில தரப்பினர் போர்க்கொடி தூக்கினர். போராட்டங்களை நடத்தினர். எதற்கும் அவர் அஞ்சவில்லை. மாநாட்டில் பங்கேற்று, ஈழத் தமிழர்களுக்கான அரசியல் தீர்வின் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தினார்.

ஈழத் தமிழர்களுக்காக மட்டுமல்ல மலையகத் தமிழர்களின் அரசியல், பொருளாதார, சமூக விடுதலைக்காகவும் பாகுவின் குரல் ஓங்கி ஒலித்தது. சம்பள உயர்வுக்கான போராட்டங்களில் பங்கேற்று தாக்குதலுக்கும் அவர் இலக்காகினார்.

அவரிடம் இன, மத பேதம் கிடையாது, கொள்கைக்கு முதலிடம். மக்களுக்கான அரசியலை அவர் செய்தார். மக்களை வைத்து அரசியல் செய்ய அவர் முற்படவில்லை. அதனால்தான் அவர் பிரதிநிதித்துவப்படுத்திய நவ சம சமாஜக் கட்சிக்குரிய வாக்கு வங்கி குறிப்பிட்டுக் கூறும் அளவுக்கு இல்லை. ஆனால், கொள்கை மாறா அரசியல் பயணத்தால் இன்றும் அவர் போற்றப்படுகின்றார்.

அவர் ஆட்சியாளர்களுக்கு சிம்மசொப்பனமாக விளங்கியவர். அரசியல் பழிவாங்கலுக்காக அவரின் விரிவுரையாளர் பதவி பறிக்கப்பட்டது. நல்லாட்சியின்போது அவருக்கு இழப்பீடு வழங்க அமைச்சரவை ஒப்புதலுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

ஜனாதிபதித் தேர்தலில் அவர் போட்டியிட்டார். மேல் மாகாண சபை உறுப்பினராக அவர் இருந்தார். கடைசியாக தெஹிவளை - கல்கிசை மாநகர சபை உறுப்பினராக அவர் இருந்தார். மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணியுடன் கூட்டணி வைத்து ஏணி சின்னத்தில் போட்டியிட்டு அவர் வெற்றி பெற்றார். (05)

## ஜனாதிபதித்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

76 வருடங்களாகப் பல்வேறு அரசியல் கட்சிகளும் நாட்டை வங்குரோத்து நிலைமைக்கு இட்டுச் சென்றதாகவும் அவர் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

ஊழலற்ற நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான தேவையுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ள அவர், தமது எக்ஸ் தளத்தில் சூஊசரளாஊழசசரிவழைெ எனும் ஹேஷ்டேக்கையும் பதிவிட்டுள்ளார்.

நாட்டின் வருமானத்தை அதிகரிப்பதற்காக இயற்கை வளங்களைப் பயன்படுத்த வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையை முன்னேற்றுவதற்குத் தம்முடன் இணைந்துகொள்ளுமாறும் சரத் பொன்சேகா நாட்டு மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார். (05)

## ஊடகவியலாளர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வாய்ப்பு அமைவதில்லை. எனவே, இது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவிடம் கோரிக்கையொன்றை முன்வைக்குமாறும், உத்தியோகபூர்வ ஊடக அடையாள அட்டை உள்ளவர்கள் தபால் மூலம் வாக்களிப்பதற்கான அனுமதியை கேட்கும்படியும் மேற்படி ஊடகத்துறையினர் என்னிடம் தெரிவித்தனர்.

அவர்களது அந்த கோரிக்கையினை தேர்தல் ஆணைக்குழுவின் கவனத்திற்கு சமர்ப்பிற்கின்றேன்" - என்றார். (ரெஜ-66)

# முன்னாள் போராளியான சுயாதீன ஊடகவியலாளர் இசைப்பிரியன் காலமானார்



முன்னாள் போராளியும் ஊடகவியலாளரும் வவுனியா பிரஜைகள் குழுவின் ஊடகப் பேச்சாளரும் அரசியல் சமூக செயற்பாட்டாளருமான ஈழம் சேகுவேரா (இசைப்பிரியன்) இன்று காலமானார்.

சுயாதீன ஊடகவியலாளராகவும், பத்தி எழுத்தாளராகவும், அரசியல் விமர்சகராகவும், கலைஞனாகவும் பல்துறைகளிலும் அவர் கால் பதித்தவர்.

வன்னியில் புனிதபூமி சிறுவர் இல்லத்தில் வளர்ந்து பாடசாலைப் படிப்பையும் முடித்து நிதர்சனத்தில் அவர் பணி புரிந்துள்ளார்.

அவர் வடபோர்முனை பயிற்சி ஆசிரியராக இருந்து இறுதிப் போரில் காணாமல் ஆக்கப்பட்ட செஞ்சுடரின் சகோதரரும் ஆவார்.

நிமிர்வு, சமூகம் ஊடகம், எழுநா உள்ளிட்ட ஊடகங்களிலும் அவர் ஊடகவியலாளராகப் பணியாற்றியுள்ளார்.

ஊடகப் பணிகளை அர்ப்பணிப்புடனும், ஈடுபாட்டுடனும் செய்யும் ஊடகத் தோழமையின் திடீர் இழப்பு ஊடகத்துறை சமூகத்தினருக்கு ஆழ்ந்த கவலையை ஏற்படுத்தியுள்ளது. (05)

# ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கும் விஜயதாஸ

*2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராகக் களமிறங்குவதாக நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ இன்று உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.*

*மக்கள்கூட்டணியின்சார்பில்வேட்பாளராகக் களமிறங்குவதாகவும், சின்னத்தைப் பின்னர் அறிவிப்பதாகவும் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.*

*இலங்கையினதும், இலங்கை மக்களினதும் வெற்றியை முன்னிறுத்தியே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராகக் களமிறங்குவதாக விஜயதாஸ ராஜபக்ஷ மேலும் குறிப்பிட்டுள்ளார்.*

*"உங்களது விதியைத் தீர்மானிக்கும் உரிமையை அரசியல்வாதிகளிடம்கையளித்துப் பார்த்துக்கொண்டிருப்பதால் எஞ்சியது துன்பம் மாத்திரமே. உலகம் மாற்றமடைவதைப் பார்ப்பதற்கு விரும்பினால் அம்மாற்றத்தை உங்களால் மாத்திரமே ஏற்படுத்தமுடியும்" - என்றும் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ நாட்டு மக்களுக்கு அறைகூவல் விடுத்துள்ளார்.*

*(05)*




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
TV
காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# கிளிநொச்சி திருவையாறு மகா வித்தியாலயத்தின் பொன்விழா மூன்று நாள்கள் நடைபெறவுள்ளது!




கிளிநொச்சி திருவையாறு மகாவித்தியாலயத்தின் பொன்விழா நிகழ்வுகள் அதிபர் கி. விக்னராஜா தலைமையில் நாளை 26 ஆம் திகதி ஆரம்பமாகி, 27, 28 ஆம் திகதிகளிலும் காலை மாலை அமர்வுகளாக இடம்பெறவுள்ளன. எதிர்வரும் வெள்ளி காலை நடைபவனி இடம்பெறும் இதன் பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் கி. சின்னராசா கலந்து கொள்வார். அன்று மதியம் சிரேஷ்ட சுற்றாடல் உத்தியோகத்தர் க. சிவேந்திரம் பிரதம விருந்தினராகப் பங்கேற்க மரநடுகை நிகழ்வு இடம்பெறும் அன்று மாலை கிளிநொச்சி தெற்கு கல்வி வலய உடற்கல்விப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ப. பார்த்திபன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ள பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி நடைபெறும்.

மறுநாள் சனிக்கிழமை இலங்கையின் நிலவுருவ அமைப்பு பாடசாலையில் நிறுவப்பட்டுக் கையளிக்கப்படும் இதன் பிரதம விருந்தினராக மருத்துவர்களான சாந்தகுணாகரன் தம்பதியர் கலந்து கொள்வர். அன்று மதியம் விஞ்ஞான ஆய்வு கூடத் திறப்பு விழா இடம்பெறும். இதன் பிரதம விருந்தினராக வட மாகாண விஞ்ஞானபாட பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ. நிருபராணி கலந்து கொள்வார். அன்றுமாலை வைத்தியர் வி. ஜெக்கப்சன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ள பரிசளிப்பு விழா நடைபெறும்.

நிறைவுநாள் ஞாயிற்றுகிழமை (28) காலை பொன்விழா மலர் வெளியீடு இடம்பெறும். இதன் பிரதம விருந்தினராக கிளிநொச்சி தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் பிரதீபா காயத்திரி கஜபதி கலந்து கொள்வார். கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் மலரின் வெளியீட்டுரையை ஆற்றுவார்.

அன்று மாலை பாடசாலைக்குப் பெருமை சேர்த்தோருக்கான கௌரவிப்பு நிகழ்வு இடம்பெறும். இதன் பிரதம விருந்தினராக கிளிநொச்சி தெற்கு கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ந. காண்டீபன் கலந்து கொள்வார். அன்றையதினம் சிறப்பு நிகழ்ச்சியாக செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசனை நடுவராகக் கொண்டு சொற்சமர் விவாத நிகழ்ச்சி இடம்பெறுவிருக்கிறது.

# கலாசாலையில் ஆடிப்பிறப்பு விழா



கோப்பாய் ஆசிரியர் கலாசாலை கவின்கலை மன்றம் முன்னெடுத்த ஆடிப்பிறப்பு விழா நேற்றுக் காலை கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் ரதிலஷ்மி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி லாகினி நிருபராஷ் அவர்களும் சிறப்பு விருந்தினராக வலிகாமம் கிழக்கு பிரதேச கலாசார உத்தியோகத்தர் பா.ஜெயதாசும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வுகளை ஆரம்பக் கல்விநெறி ஆசிரிய மாணவி திருமதி மைதிலி கோகுலக்கண்ணன் நெறிப்படுத்தினார். வரவேற்புரையினை விஞ்ஞானநெறி ஆசிரிய மாணவி கிட்டா தவராசாவும் பிரதி அதிபர் க.செந்தில்குமரன் வாழ்த்துரையையும் விஞ்ஞானநெறி ஆசிரிய மாணவன் இ.செந்தூர்செல்வன் ஆசிரிய மாணவர் உரையையும் விரிவுரையாளர் வேல் நந்தகுமார் ஆடிப்பிறப்புப் பற்றிய சிறப்புரையையும் ஆற்றினர்.

கவின்கலைமன்றக்காப்பாளர் ரஜிதா சின்னதுரை பிரதம விருந்தினரை அறிமுகம் செய்து வைத்ததோடு தொடக்கவுரையையும் ஆற்றினார். நன்றியுரையினை கிறிஸ்தவகல்விநெறி ஆசிரிய மாணவி கமலினி சுதாகர் ஆற்றினார்.

நிகழ்வின் நிறைவில் கலாசாலை சமூகத்தினர் அனைவருக்கும் ஆடிக்கூழ் பரிமாறப்பட்டது.




# பிள்ளைகளின் உணவுப் பழக்கமும் நாளாந்த செயற்பாடும் தொடர்பாக பெற்றோருக்கான விழிப்புணர்வு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

முன்பிள்ளைப்பருவ பராமரிப்பு மற்றும் தேசிய அபிவிருத்தி வாரத்தையொட்டி காரைதீவு பிரதேச செயலாளர் திருமதி.ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் வழிகாட்டலின் கீழ் முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ. ஜெஸ்மிரின் நெறிப்படுத்தலில் காரைதீவு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட முன்பள்ளி பாடசாலை மாணவர்களின் பெற்றோர்களுக்கு “பிள்ளைகளின் உணவுப் பழக்கமும் நாளாந்த செயற்பாடும்” எனும் தலைப்பிலான விழிப்புணர்வு கருத்தரங்கு நேற்று புதன்கிழமை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் காரைதீவு பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் எஸ்.பார்த்தீபன் கலந்து கொண்டதோடு, காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய மேற்பார்வை பொதுச்சுகாதார மருத்துவ தாதியர் மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர் ஆகியோர்கள் வளவாளர்களாக பங்கேற்றனர்.

# கொழும்பு ஹில்டன் ஹோட்டலையும் விற்பனை செய்யத் திட்டமிடுகின்றனர்?

## ஊழல் எதிர்ப்புக் கூட்டணியின் தலைவர் வசந்த சமரசிங்ஹ

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பணம் தேடும் நோக்கில் அரசாங்கத்தின் சொத்துக்களை கொள்ளையடித்து விற்பனை செய்யும் மோசடியை அரசாங்கம் நடத்தி வருவதாக ஊழல் எதிர்ப்புக் கூட்டணியின் தலைவர் வசந்த சமரசிங்ஹ தெரிவித்துள்ளார்.

கொழும்பின் மையப் பகுதியில் ஏழரை ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள 300 அறைகளைக் கொண்ட ஹில்டன் ஹோட்டலை விற்பனை செய்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட சமரசிங்ஹ குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி ஹில்டன் ஹோட்டல் 15 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் ஏழு நட்சத்திர ஹோட்டலாக தரமுயர்த்தப்பட்டுள்ளது எனவும், கடந்த வருடத்தின்போது 124 பில்லியன் டொலர்களுக்கு இதனை விற்பனை செய்ய மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், அண்மையில் அதனை 55.5 பில்லியன் டொலர்களாக மறுமதிப்பீடு செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ள அவர், தற்போது இதனை 41.5 பில்லியன் டொலர்களுக்கு விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளதாகவும் இது இலங்கை நாணய பெறுமதியில் சுமார் 12,300 மில்லியன் ஷரூபா எனவும் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டிற்கு முறையாக வரி செலுத்தாத ஒருவருக்கு இந்த ஹோட்டலை கொள்வனவு செய்ய சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளதாகவும், அவ்வாறே, கண்டி போகம்பரை சிறைச்சாலை பகுதியில் ஹில்டன் ஹோட்டலை நிர்மாணத்திற்காக விற்பனை செய்ய முயல்வதாகவும், தேர்தலுக்கு தேவையான பணத்தை ஈட்டிக்கொள்ளவே இந்த கொடுக்கல் வாங்கல்கள் நடைபெறுவதாகவும் சமரசிங்ஹ மேலும் தெரிவித்துள்ளார். (ரெஜ-65)



# அரையிறுதிக்கு முன்னேறியது இலங்கை மகளிர் அணி!



மகளிருக்கான ஆசியக் கிண்ணத் தொடரின் கடைசி லீக் போட்டியில் இலங்கை மகளிர் அணி 10 விக்கெட்டுகளால் தாய்லாந்து மகளிர் அணியை வெற்றிபெற்று அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ரங்கிரி, தம்புள்ளை சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில நேற்று (24) நடைபெற்ற பி குழுவுக்கான கடைசி லீக் போட்டியில் இலங்கை, தாய்லாந்து அணிகள் மோதியிருந்தன.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்த தாய்லாந்து மகளிர் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 93 ஓட்டங்களைப் பெற்றது.

அந்த அணியின் நன்னாபட் கொஞ்சாரோஎன்கை மாத்திரம் ஓரளவு தாக்குப் பிடித்து 47 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். மற்ற வீராங்கனைகள் சொற்ப ஓட்டங்களுடன் வெளியேறினர்.

பந்துவீச்சில் கவீஷா டில்ஹாரி 13 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

இதையடுத்து, 94 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற எளிய இலக்குடன் களமிறங்கிய இலங்கை மகளிர் அணி, 11.3 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 94 ஓட்டங்களைப் பெற்று 10 விக்கெட்டுகளால் அபார வெற்றியைப் பெற்றது.

அணித்தலைவி சமரி அத்தப்பத்து 35 பந்துகளில் 2 பௌண்டறிகள், 4 சிக்ஸர்கள் உட்பட 49 ஓட்டங்களுடனும், விஷ்மி குணரட்ன 39 ஓட்டங்களுடனும் ஆட்டம் இழக்காதிருந்தனர். இந்தப் போட்டியில் ஆட்டநாயகி விருதை இலங்கை அணித்தலைவி சமரி அத்தபத்து பெற்றார்.

இந்த வெற்றியுடன் பி குழுவிலிருந்து தோல்வி அடையாத அணியாக அரை இறுதியில் விளையாடத் தகுதிபெற்ற இலங்கை, நாளை (26) இரவு நடைபெறவுள்ள இரண்டாவது அரை இறுதிப் போட்டியில் பாகிஸ்தானை எதிர்த்தாடவுள்ளது.

அதற்கு முன்னதாக நடைபெறவுள்ள முதலாவது அரை இறுதியில் நடப்புச் சம்பியன் இந்தியா, பங்களாதேஷை எதிர்த்தாடவுள்ளது. (04)




## தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரங்களுக்கு நிரந்தர சாரதி அனுமதி அட்டைகள் விரைவில்!



தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரத்தைக் கொண்டுள்ள வாகனச் சாரதிகளுக்கு, இந்த வருடம் செப்டம்பர் அல்லது ஒக்டோபர் மாதம் முதல் நிரந்தர சாரதி அனுமதி அட்டைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த வீரசிங்க இன்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட வேளையில், சாரதி அனுமதி அட்டைகளை இறக்குமதி செய்வதில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் காரணமாக நிரந்தர சாரதி அனுமதிப்பத்திர அட்டைகளை வழங்க முடியாததிருந்த இதனால் 800,000 க்கும் மேற்பட்ட வாகன சாரதிகளுக்கு நிரந்தர சாரதி அனுமதிப்பத்திர அட்டைகளுக்கு பதிலாக தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டது.

இந்நிலையில், தற்போது தேவையான சாரதி அனுமதி அட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும், புதிய சாரதி உரிமம் மற்றும் புதுப்பித்தல்களுக்காக சாரதி உரிமங்கள் அச்சிடப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (04)

# போஷாக்குக் குறைந்த கர்ப்பிணித் தாய்மார்கள் சிறுவர்களுக்கு போசாக்குப் பொதிகள் வழங்கல்



(வி.ரி.சகாதேவராஜா)

நாவிதன்வெளி பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதேசத்தில் போசாக்கு குறைந்த கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் சிறுவர்களுக்கான போசாக்குப் பொதிகள் வழங்கும் நிகழ்வு இன்று நாவிதன்வெளி பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது.

நாவிதன்வெளி பிரதேச சபைச் செயலாளர் பா.சதீஷ்கரன் தலைமையில் நடைபெற்ற

நிகழ்வில் பிரதம அதிதியாக நாவிதன்வெளி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எம்.எம்.பாயிஸ் கலந்து சிறப்பித்தார்.

கௌரவ அதிதிகளாக பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் அ. சுதர்சன் மற்றும் சவளக்கடை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் பிரதேச சபை உத்தியோகத்தர்கள் பங்கேற்றனர்.

நிகழ்வில் சுமார் ஐந்து லட்சம் ஷரூபா பெறுமதியான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு, தேர்வு செய்யப்பட்ட 100 பயனாளிகளுக்கு தலா 5000 ஷரூபாய் பெறுமதியான உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

நாவிதன்வெளி பிரதேச சபையின் 2024 ஆம் ஆண்டுக்கான நலன்புரி வேலைத்திட்டத்தின் கீழ் இந்தப் போசாக்குப் பொதிகள் வழங்கப்பட்டன என்று சபையின் நிதிப் பொறுப்பு உத்தியோகத்தர் மு.ரகுநந்தன் தெரிவித்தார்.

# மல்லாவியில் இலங்கை கூடைப்பந்தாட்ட சம்மேளனம் ஒழுங்கு செய்திருந்த கூடைப்பந்தாட்ட பயிற்சி முகாம்





(அஸ்ஹர் இப்றாஹிம்)

சிறந்த வீர வீராங்களைகளை கூடைப்பந்தாட்ட துறையில் அபிவிருத்தி செய்து தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் சாதனைகள் படைக்கும் நோக்கில் வதிவிட பயிற்சி முகாமொன்றினை இலங்கை கூடைப்பந்தாட்ட சம்ம் மல்லாவி கல்லூரியில் ஒழுங்கு செய்திருந்தது.

இலங்கை கூடைப்பந்தாட்ட மாவட்ட அபிவிருத்திக் குழு இலங்கை இராணுவத்தினருடன் இணைந்து இந்தப் பயிற்சி முகாமை நடாத்தியிருந்தது.

# உகந்தை முருகன் ஆலய வளாகத்தில் சிரமதானம்

(எம்.ஏ.ஏ.அக்தார்)

வரலாற்றுச் சிறப்பு மிக்க உகந்தை முருகன் ஆலய தீர்த்தோற்சவம் நிறைவுற்றதன் பின்னர் ஆலய வளாகத்தினை துப்பரவு செய்யும் பணியை ஆலையடிவேம்பு பிரதேச சமூக நலன் அமைப்பினர் முன்னெடுத்தனர்.



ஆலய வளாகத்தில் பக்தர்களினால் சேர்க்கப்பட்டிருந்த குப்பைகளையும், அங்கு போடப்பட்டிருந்த போத்தல்கள் பொலித்தீன் பைகள் போன்ற டெங்கு பரவும் அபாயப்பொருட்களையும் அகற்றியதுடன் தேவையற்ற பொருட்களை தீயிட்டுக் கொழுத்தினர்.

அத்தோடு மேலதிகமான குப்பைகளை உழவு இயந்திரத்தின் உதவியுடன் அகற்றி அவற்றை சேகரிக்கும் இடத்துக்கு எடுத்துச் சென்றனர்.

ஆலய உற்சவகாலத்தின் முன்னரும் இதுபோன்ற சிரமதானப்பணிகளை முன்னெடுத்த அமைப்பினர், உற்சவ காலங்களில் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கும் பணியினையும் முன்னெடுத்தனர்.

இதேநேரம் ஆலயத் தீர்த்தோற்சவத் தினத்திற்கு முன்தினத்தில் இருந்து இரவு பகலாக, தொடராக அன்னதானம் வழங்கும் பணியினையும் அவர்கள் மேற்கொண்டிருந்தனர்.



# உண்மைகளை மறைப்பதற்காகவா சுகாதார அமைச்சின் விசாரணைப் பிரிவு அதிகாரிகள் இடமாற்றப்பட்டனர்?

## சுகாதாரத் தொழில் நிபுணர்களின் சங்கம் கேள்வி

சுகாதார அமைச்சின் விசாரணைப் பிரிவின் விசாரணை அதிகாரிகள் திடீரென இடமாற்றம் செய்யப்பட்டுள்ளமையின் நோக்கம் தவறான விசாரணைகள் தொடர்பான உண்மைகளை ஒளித்து மறைப்பதற்காகவா என சுகாதார தொழில் நிபுணர்களின் சங்கம் கேள்வி எழுப்பியுள்ளது.

சுகாதார அமைச்சின் விசாரணை பிரிவில் பணியாற்றிய முப்பது விசாரணை அதிகாரிகளில் இருபத்தி ஏழு பேர் திடீரென இடமாற்றம் செய்யப்பட்டிருப்பது விசாரணைத் தகவல்களை மறைக்கும் நோக்கில் செய்யப்பட்டிருக்கலாம், எனவே அமைச்சு இது தொடர்பில் தெளிவுபடுத்த வேண்டும் எனவும் மேற்படி சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் சுகாதார அமைச்சின் விசாரணை பிரிவினர் செயற்பட்ட விதத்தின்படி பார்க்கையில், சுகாதார சேவையில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் தொடர்பில் கிடைத்த தகவல்களை வெளிப்படுத்தாமல், அவற்றை வெளிப்படுத்திய தொழிற் சங்கங்களை ஒடுக்குவதற்கே நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும், இவ்வாறு வெளிப்படுத்தப்பட்ட தகவல்களை தற்போது இரகசியப் பொலிஸாரும் நீதிமன்றமும் உண்மைத் தகவலாக ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ரெஜ-63)



# நாட்டில் 22 வீதம் பேர் கடன் பெற்றே ஒருவேளை உணவு உண்கின்றனர்!

## குடும்ப அலகுக் கணக்கெடுப்பு தெரிவிப்பு



பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையில் 22 வீதமான குடும்பங்கள் கடனாளிகளாக மாறியுள்ளதாக மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளியியல் துறையால் வெளியிடப்பட்ட குடும்ப அலகு கணக்கெடுப்பு (2023) அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடனின் அதிகபட்ச விகிதம் அடமானங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் அடமான பரிவர்த்தனைகளில் 31 சதவீதம் கடனாக பெறப்பட்டுள்ளதாக அறியவந்துள்ளது. நாட்டின் 22.3 வீதமான குடும்பங்கள் தமது அன்றாட உணவுத் தேவையை பூர்த்தி செய்வதற்காக கடன் பெற்றுள்ளதாகவும் அந்த அறிக்கை கூறுகிறது.

அதன்படி, அரச மற்றும் தனியார் வங்கிகளிடமிருந்து 21.9 வீதமும், சமுர்த்தி வங்கியிடமிருந்து 7.1வீதமும், கடன் வழங்குனர்களிடமிருந்து 9.7 வீதமும், நிதி மற்றும் குத்தகை நிறுவனங்களிடமிருந்து 8.7 வீதமும் கடன்கள் பெறப்பட்டுள்ளன. அத்துடன், குடும்ப அலகுகளில் அதிக அளவிலான கடன்சுமையால் ஏற்படும் மன அழுத்தம் மற்றும் நிதி அழுத்தம் ஆகியவை மன நலனையும் பாதிக்கிறது என்பதையும் இந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. (ரெஜ-64)








## மருத்துவ உதவிக்கான போக்குவரத்து கொடுப்பனவுகள்

திருகோணமலை தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள விசேட தேவையுடையோருக்கு மருத்துவ சிகிச்சைக்காக சென்று வருவதற்கான போக்குவரத்து கொடுப்பனவு நேற்று (24) வழங்கி வைக்கப்பட்டது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வானது அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம் ஊடான நிதிக் பங்களிப்பின் கீழ் இடம் பெற்றது.

இதில் தலா ரூபா 25000 பெறுமதியான காசோலைகள் வழங்கப்பட்டன. இதில் உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், சமூக சேவைகள் உத்தியோகத்தர், சமூக சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



## மாணவத் தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை கல்வி வலயத திற்குட்பட்ட கல்முனை அல் பஹ்ரியா மகா வித்தியாலய மாண வத்தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு பாடசாலை கேட்போர் கூடத்தில் அதிபர் எம்.ஏ.சலாம் தலைமையில் அண்மையில் (22) நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக தொழிலதிபர் முஹம்மட் றிஸ்வானும், கௌரவ அதிதியாக தலைமைத் துவப் பயிற்சி வளவாளர் டொக்டர் எம்.ஸி.ஏ.நவாசும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் பிரதி அதிபர், உதவி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர் சங்கப் பிரதிநிதிகள், பாடசாலை அபிவிருத்திச் சபை பிரதிநிதிகள் மற்றும் பெற்றோர் கலந்து கொண்டனர்.


JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
DOWNLOAD PASSENGER APP:
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
jride
JRide - Beyond the Road
JRide Driver: Drive & Deliver
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
GET IT ON Google Play
Download on the App Store
வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க ஒரு தீர்வு!
இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் சேவையை தொடங்கலாம்!
DOWNLOAD DRIVER APP:
YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE
Google Play
App Store
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?
விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?
எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.
HOTLINE : 706563213 / 703563213
JRIDE TAXI APP
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!